# கேஎம்சிஎச் மருத்துவமனையில் மூட்டு வலிக்கு நவீன சிகிச்சை



திருமலைசாமி

கோவை, மே 4: மூட்டு வலிக்கு முற்றுப்புள்ளி வைக்க கோவை மெடிக்கல் சென்டர் மருத்துவமனையில் நவீன அறுவை சிகிச்சை செய்யப்படுகிறது.

கோவை மெடிக்கல் சென்டர் மருத்துவமனை மூட்டு மாற்று அறுவை சிகிச்சை நிபுணர் டாக்டர் திருமலைசாமி கூறியதாவது:

மூட்டு வலி தற்போது மிகவும் சாதாரண நோயாகி விட்டது. 50 வயதுக்கு மேற்பட்ட ஆண்களும், பெண்களும் மூட்டு வலியால் மிகவும் பாதிப்படைகின்றனர். மூட்டில் உள்ள தலைபாக ஜவ்வு தேய்ந்து விடுவதால் மேல் எலும்பும், கீழ் எலும்பும் உரசுகிறது. அவ்வாறு எலும்புகள் உரசும் போது மூட்டுவலி ஏற்படுகிறது.

மூட்டு வலி அதிகமாகும் போது மாத்திரைகள் சாப்பிடுவதால் சிறுநீரகம் பாதிக்கப்படுகிறது. மூட்டுவலிக்கு மிக முக்கிய காரணம் மூட்டு தேய்மானம் மற்றும் சரவாங்கி(உடம்பில் உள்ள பல மூட்டுகளில் வலி ஏற்படுவது) ஆகியவை. மூட்டு வலியால் பாதிக்கப்படும் நோயாளிகள் அலோபதி மருந்தில் நம்பிக்கை இல்லாமல் பல்வேறு சிகிச்சை முறை களை நாடுகின்றனர். தற்போதைய நிலையில் மிகவும் பழுதான மூட்டுக்கு, மூட்டு மாற்று அறுவை சிகிச்சை தவிர வேறு எந்த சிகிச்சையும் பயன் அளிக்காது.

கோவை மெடிக்கல் சென்டர் மருத்துவமனை, மூட்டு மாற்று அறுவை சிகிச்சையில் இந்தியாவில் முன்னோடி மருத்துவமனையாக திகழ்கிறது. மூட்டுமாற்று அறுவை சிகிச்சை முறையில் பல நுண்ணிய கருவிகள், மேம்படுத்தப்பட்ட நன்கு மடக்கக்கூடிய மெட்டல் மூட்டு, நீண்ட நாள் உழைக்கும் ஆக்சினியம் மெட்டல் மூட்டு போன்ற நவீன சிகிச்சை முறைகள் மேற்கொள்ளப்படுகிறது. கம்ப்யூட்டர் மூட்டு மாற்று அறுவை சிகிச்சை, ஒவ்வொரு நோயாளிக்கும் எம்ஆர்ஐ மூலம் தனித்துவம் பெற்ற மூட்டு மாற்று உபகரணங்கள் அமெரிக்காவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டு சிகிச்சைக்கு பயன்படுத்தப்படுகிறது. இது போன்ற கம்ப்யூட்டர் உபகரணத்தால் செய்யப்படும் ஆபரேஷன் மிகவும் துல்லியமாகவும், நாள்பட நீடித்து உழைக்க கூடியதாக வும் இருக்கும். நோயாளிகள் கால்களை மடக்கி சம்மனம் போட்டு கீழே உட்காரக் கூடிய அளவுக்கு மூட்டு பொருத்தலாம். முன்பெல்லாம் இது போன்ற சிகிச்சைக்கு 14 நாட்கள் மருத்துவமனையில் தங்கி சிகிச்சை பெற வேண்டும். தற்போது 3 அல்லது 4 நாட்களில் சிகிச்சை முடித்து வீடு திரும்பலாம்.

ஆர்த்ரோஸ்கோபி எனப்படும் நுண்துளை அறுவை சிகிச்சையும் செய்யப்படுகிறது. முழங்கால், தோள்பட்டை, இடுப்பு மூட்டில் ஏற்படும் ஜவ்வு கிழிதல் போன்ற மூட்டு வலியால் உண்டாகும் காரணங்களுக்கு அரை சென்டிமீட்டர் துளை போட்டு வலி இல்லாமல் அறுவை சிகிச்சை செய்யப்படுகிறது. பெரும்பாலும் இச்சிகிச்சை பெற்றவர்கள் 2 நாளில் வீடு திரும்பலாம். இதனால் மூட்டு வலி நீங்கி பழைய நிலைக்கு திரும்பி அன்றாட பணிகளை செய்ய முடியும். விளையாட்டு வீரர்கள் எப்போதும் போல விளையாட முடியும். 30 ஆண்டு எலும்பு மூட்டு துறையில், மூட்டு மாற்று அறுவை சிகிச்சை மிகப்பெரிய முன்னேற்றம் கண்டுள்ளது.

மூட்டு தேய்மானம் பெண்களுக்கு அதிகளவு வரவாய்ப்புள்ளது. மூட்டு தேய்மானம் வராமல் தடுக்க உடல் எடையை குறைக்க வேண்டும். உடம்பில் உள்ள மூட்டுகளில் வலி ஏற்பட்டால் உடனடியாக டாக்டரை அணுகுவது நல்லது. வயதானவர்களுக்கு எதற்காக ஆபரேஷன் செய்ய வேண்டும் என நினைக்கின்றனர். மறைந்த இங்கிலாந்து அரசி எலிசபெத் ராணி 102 வயதில் மூட்டு மாற்று அறுவை சிகிச்சை செய்துள்ளார். வயதானவர்களுக்கு ஆபரேஷன் செய்வது, வெற்றிகரமாக அமைவதால் வாழ்க்கை முழுவதும் மூட்டு வலியால் அவதிப்படுவதை தவிர்க்கலாம். கோவை மெடிக்கல் சென்டர் மருத்துவமனையில் வயதான நோயாளிகளுக்கும் அதிகளவில் அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளன. இவ்வாறு டாக்டர் திருமலைசாமி கூறினார்.